செ.வெ. எண்: 1011 நாள்: 16/11/2010

## பத்திரிக்கைச் செய்தி

பள்ளி / கல்லூரி செல்லும் மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்ய கீழ்கண்ட நடவடிக்கைகளை கடைப்பிடிக்க அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் பகுதி அலுவலர் இயக்கூர்த்தி ஆய்வாளர்களுக்கு சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது மேலும் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு உரிய அறிவுரை வழங்கிட பள்ளி / கல்லூரி துறை இயக்குநர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு

**IV. பெற்றோர்கள், பள்ளி மாணவர்களுக்கு வழங்க வேண்டிய விழிப்புணர்வு மற்றும் அறிவுரைகள்**

- முன் அறிமுகம் இல்லாத நபர்கள் யாரேனும் பள்ளிக்கு செல்லும் வழியிலோ அல்லது திரும்பி வரும்போதோ அழைத்துப் பேசினால், அவர்களிடம் பேச வேண்டாம் என்றும் உடனடியாக அவர்களை விட்டு வேகமாக வந்துவிட வேண்டும் என்றும் மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்
- அறிமுகம் இல்லாத நபர்கள் காரில் வந்து அதில் ஏறுமாறு கூறினால் ஏறக்கூடாது. உடனடியாக இது குறித்து அருகில் உள்ள கடைக்கோ அல்லது போலீஸ்காரர்கள் யாரேனும் நின்றால் அவர்களிடம் புகார் செய்ய மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும்
- வழக்கமாக பள்ளிக்கு அழைத்துச் செல்பவர்கள் அல்லது பள்ளியில் இருந்து வீட்டிற்கு அழைத்து வருபவர்களை தவிர வேறு யாரேனும் புதிய நபர்கள் வந்தால் அவர்களுடன் செல்லக் கூடாது என்று மாணவர்களிடம் கூற வேண்டும்
- ஒரு வேளை வழக்கமான நபர்களுக்கு பதிலாக பெற்றோர்கள் வேறு நபர்களை அனுப்பும் சமயங்களில் இது குறித்து குழந்தைகளிடம் முன்கூட்டியே விபரம் தெரிவித்து இருக்க வேண்டும். வழக்கமான நபருக்கு பதிலாக செல்லும் புதிய நபர் ஏற்கெனவே குழந்தைக்கு அறிமுகம் ஆனவராக இருக்க வேண்டும்

**V. பள்ளி / கல்லூரி நிர்வாகமும் மற்றும் பள்ளி / கல்லூரி பணிக்காக இயக்கப்படும் வாடகை வாகன (On College / School Duty) உரிமையாளர்களும் கடைப்பிடிக்க வேண்டியவை**

- அனுமதிச்சீட்டு பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்களின் மீது "பள்ளி / கல்லூரி வாகனங்கள்" - என எழுதப்பட வேண்டும்.
- வாடகை வாகனங்கள் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்காக இயங்கும் பட்சத்தில் "பள்ளி / கல்லூரி பணிக்காக மட்டும்" என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

- எந்த ஒரு பள்ளி வாகனமும் அனுமதிக்கப்பட்ட இருக்கைகளுக்கு மேல் பள்ளி குழந்தைகளை ஏற்ற கூடாது.
- ஒவ்வொரு பள்ளி / கல்லூரி வாகனமும் முதல் உதவிப் பெட்டியை கண்டிப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு பள்ளி / கல்லூரி வாகனத்திலும் தீயணைப்பான் கருவிகள் வைக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு பள்ளி / கல்லூரி வாகனத்திலும் அந்தந்த பள்ளி மற்றும் கல்லூரியின் தொலைபேசி எண்கள் எழுதப்பட வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி வாகனத்தை இயக்கும் ஓட்டுநர்கள் கனரக ஓட்டுநர் உரிமம் பெற்று, அதில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும் அந்த ஓட்டுநர், போக்குவரத்து குற்றங்களுக்காக இரண்டு முறைக்கு மேல் தண்டனை பெற்றவராக இருக்க கூடாது
- ஒவ்வொரு பள்ளி / கல்லூரி வாகனங்களின் கதவுகள் சரியாக பூட்டப்படும் நிலையில் உள்ளதா என உறுதி செய்யப்பட வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி வாகனத்திலும் "பாதுகாப்பு கிரில்" (Horizantal Grills) பொருத்தப்பட வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி / கல்லூரி வாகனங்களிலும் ஓட்டுநர் தவிர தகுதியான மற்றொரு உதவியாளரை நியமிக்க வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி வாகனம், மற்ற வாகனங்களிலிருந்து வேறுபாடாகத் தெரியும் பொருட்டு அவ்வாகனங்களில் மஞ்சள் வண்ணம் பூசப்பட வேண்டும்
- பள்ளி புத்தகப் பையினை பாதுகாப்பாக வைக்க இருக்கையின் அடியில் போதிய இடவசதி செய்யப்பட்டிருக்க வேண்டும்
- ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்களிலும் ஆசிரியர் நிலையில் ஒருவர் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் இருக்க வேண்டும்

**VI.** **போக்குவரத்து துறை / காவல் துறை மற்றும் பள்ளி நிர்வாகம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்**

➢ ஒவ்வொரு பள்ளி / கல்லூரி ( EIV) மற்றும் பள்ளி / கல்லூரி பணிக்காக (On College / School Duty) வாகனங்களை இயக்கும் ஓட்டுநர்களின் விவரங்களை தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 12ல் உள்ளவாறு படிவம் - AVT வழங்கப்பட்டு, அப்படிவத்தில் ஓட்டுநர் புகைப்படம் ஒட்டப்பட்டு அதை சம்மந்தப்பட்ட காவல் துறை அதிகாரியின் சான்றொப்பம் பெறப்பட்டு, அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் மேலொப்பம் இடப்பட வேண்டும். இந்த சான்றின் நகல் (Colour Xerox copy) அனைவரின் பார்வையில் படும்படி வாகனத்தின் உள்பகுதியில் வைக்கப்பட வேண்டும். இப்படிவம் ஒவ்வொரு கல்வி ஆண்டு துவக்கத்திலும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

➢ மேற்கண்டவாறு அத்தாட்சி செய்யப்பட்ட AVT படிவத்தில் உள்ள ஓட்டுநர் தவிர மற்றவரால் இயக்கப்படும் பள்ளி / கல்லூரி மாணவர்களை ஏற்றி இயக்கும் வாகனங்கள் அனுமதிச் சீட்டு நிபந்தனைக்கு புறம்பாக இயக்கப்படுவதாக கருதப்பட்டு அனுமதிச் சீட்டு மற்றும் ஓட்டுநர் உரிமம் மீது தற்காலிக இரத்து / இரத்து நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும்

➢ ஒவ்வொரு பள்ளி / கல்லூரியின் முன்பும் வாகனங்களை நிறுத்துவதற்கென தனியாக ஒரு இடத்தை ஒதுக்கித் தர வேண்டும். அந்த இடத்தில்தான் மாணவ மாணவியரை ஏற்றவோ, இறக்கவோ அனுமதிக்க வேண்டும். இதை அந்தந்த பள்ளி நிர்வாகமும், காவல் துறையினரும் கண்காணிக்க வேண்டும்.

➢ பள்ளி / கல்லூரி மாணவ மாணவியரை ஏற்றிச் செல்லும் ஒப்பந்த ஊர்தி (On College / School Duty) வாகனங்களின் ஓட்டுநர் / உதவியாளர் பற்றிய தகவல்கள் அடங்கிய பதிவேட்டினை பள்ளி நிர்வாகம் பராமரிக்க வேண்டும். வாகனத்தில் செல்லும் உதவியாளர் தொலைபேசி (கைபேசி) வசதி பெற்றிருக்க வேண்டும்

➢ போக்குவரத்து அல்லாத வாகனங்கள், மாணவ மாணவியரை விதிமுறைகளுக்கு புறம்பாக ஏற்றி செல்வதை போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

➢ மாணவர்கள் பள்ளிக்கு வந்து செல்லும் முறைகள் மற்றும் வாகனங்களைப் பற்றிய விழிப்புணர்வினை பிரார்த்தனைக் கூடம் / வகுப்பறையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

5/5

போக்குவரத்து ஆணையர்,
சென்னை-5.